

தஞ்சாவூர் மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று கும்பகோணம் –குமுளி பேருந்து சேவையை கும்பகோணம் பேருந்து நிலையத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். இதில் முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்ட அவைத்தலைவர் நாசீர் முகம்மது, ஒன்றிய செயலாளர்கள் டி.கணேசன், சுந்தர ஜெயபால்,கோ.க.அண்ணாதுரை, பகுதி செயலாளர் இரா.கல்யாணசுந்தரம், மண்டல குழு தலைவர் மனோகரன், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் அதிகாரிகள், ஓட்டுனர்கள், நடத்துனர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் கழக மாணவரணி துணை செயலாளர் வீரமணி ஜெயக்குமார் ஏற்பாட்டில் கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி வகுப்பை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரி (D. G.P) சைலேந்திரபாபு, மாணவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி, அக்னி சந்துரு, வில்லரசம்பட்டி முருகேசன், துணை மேயர் வே.செல்வராஜ், டாக்டர் விவேக், மாநகர அமைப்பாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, மாணவரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தை

# சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் — சமூக வலைதளப் பதிவில் கண்டனம்!

சென்னை, டிச.17–

மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் சிதைத்து சின்னா பின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:–

**மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

**தேசத்தந்தை காந்தியடிகளின் மீதுள்ள வன்மத்தால் அவர் பெயரைத் தூக்கிவிட்டு, வாயில் நுழையாத வடமொழிப் பெயரைத் திணித்திருக்கிறார்கள்!**

**100% ஒன்றிய அரசின் நிதியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்துக்கு இனி 60% மட்டுமே நிதி ஒதுக்குவார்களாம்!**

**இவை அனைத்துக்கும் மேலாக, நாட்டிலேயே வறுமையை முழுமையாக ஒழித்துச் சாதனை படைத்துள்ளதற்காகவே நம் தமிழ்நாடு தண்டிக்கப்படவுள்ளது! வறுமை இல்லாத மாநிலம் என்பதற்காக, இருப்பதிலேயே குறைவாகத்தான் இத்திட்டத்தின் பயன்கள் தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்குமாம்!**

**பல கோடிப் பேரை வறுமையின் பிடியில் இருந்து மீட்டு, மாண்புடன் வாழ வழிவகுத்த ஒரு திட்டத்தை ஆணவத்துடன் அழிக்கப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

**#ThreeFarmLaws, #CasteCensus போன்றவற்றில் எப்படி பின்வாங்கினீர்களோ, அதேபோல #MGNREGAவைச் சிதைக்கும் முயற்சியிலும் மக்கள் உங்களை நிச்சயம் பின்வாங்க வைப்பார்கள்! எனவே, மக்களின் சீற்றத்துக்கு ஆளாகாமல் இப்போதே #VBGRAMG திட்டத்தைக் கைவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கம் வென்ற

# தமிழ்நாட்டு வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச.17–**

**மாலத்தீவில் நடைபெற்ற 7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.12.2025) தலைமைச் செயலகத்தில், மாலத்தீவில் நடைபெற்ற 7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

மேலும், சென்னையில் நடைபெற்ற SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றதோடு, டெல்லியில் நடைபெற்ற 3வது CII Sports Business Awards 2025 விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்பட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான விருதினையும் காண்பித்து, வாழ்த்துப் பெற்றனர்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

**7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை**

மாலத்தீவில் 2.12.2025 முதல் 6.12.2025 வரை நடைபெற்ற 7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி கீர்த்தனா, செல்வி காசிமா, செல்வி மித்ரா ஆகியோர் பதக்கங்கள் வென்றனர். செல்வி கீர்த்தனா அவர்களுக்கு 1 கோடி ரூபாயும், செல்வி காசிமா அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயும், செல்வி மித்ரா அவர்களுக்கு 40 இலட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் வழங்குவதாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, செல்வி கீர்த்தனா மற்றும் செல்வி காசிமா ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் வழங்கி, வாழ்த்தி அடுத்தடுத்து வரும் போட்டிகளில் வெற்றி பெற்று நாட்டிற்கு மென்மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சந்தித்து வாழ்த்து**

இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியின் சார்பில் 9.12.2025 முதல் 14.12.2025 வரை சென்னையில் நடைபெற்ற SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா, அபே சிங், அனஹத் சிங், வேலவன் செந்தில்குமார், ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் இயக்குநர் சைரஸ் போன்சா மற்றும் பயிற்றுநர்கள் ஹரிந்தர் பால் சிங், ஆலன் சோய்சா ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து, வாழ்த்து பெற்றனர்.

**விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான விருதினைக் காண்பித்து வாழ்த்து**

டெல்லியில் 9.12.2025 அன்று நடைபெற்ற 3வது CII Sports Business Awards 2025இல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்பட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான (THE BEST STATE PROMOTING SPORTS DEVELOPMENT AWARD) விருதினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து, வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு வீரர்களின் பெற்றோர்கள் மற்றும் பயிற்சியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

### REP‘AIR INDIA’வாக மாறி வரும் ஏர் இந்தியா!

# விமானச் சேவையில் தொடரும் குழப்பங்கள்!

## தயாநிதி மாறன் எம்.பி. சரமாரி கேள்வி!

புதுடெல்லி, டிச. 17–

இந்திய விமான சேவைகளில் தொடர்ச்சியாக குழப்பங்களும், குறைபாடுகளும் நிலவுவதாக மத்திய சென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதிமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.



சமீபத்தில் இண்டிகோ விமான சேவையில் தொடர்ச்சியான பாதிப்பு, சேவை குறைபாடு ஏற்பட்டுள்ளது. ஒரே நாளில், புதுடெல்லி விமான நிலையத்தில் நூற்றுக்கு மேற்பட்ட விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டும், முந்நூற்றுக்கு மேற்பட்ட விமானங்களின் சேவை தாமதமானதும், இந்திய விமான போக்குவரத்துத் துறையின் அவலநிலையை தொடர்ந்து சுட்டிக்காட்டுகிறது. இதனால் லட்சக்கான விமான பயணிகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

விண்ணைத் தொடும் பயண கட்டணம் ஒரு பக்கம்; அவசர, அவசிய தேவைக்கு குறித்த நேரத்தில் பயணம் செய்யமுடியாத நிலை; இதனால் ஏற்படும் கால விரயம் என தொடர்ந்து சொல்லொன்னா துயரத்தை அனுபவித்து வருகின்றனர் பயணிகள்.

இதேபோல் நீண்ட நாள்களாகவே ஏர் இந்தியா விமான சேவையிலும், காலதாமதம் உள்ளிட்ட சேவை குறைபாடு இருந்துவருகிறது. நாடாளுமன்றத்தில் பாஜக உறுப்பினர்கள், ரயில் நிலையங்களை விமான நிலையங்கள்போல் மாற்றி அமைத்திடுவோம் என்று கூறி வரும் நிலையில், தற்போது பல விமான நிலையங்கள் ரயில் நிலையங்களைவிட மோசமான நிலையில் காட்சி அளிப்பது மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கான நிரந்தர தீர்வினை காணாத ஒன்றிய அரசு, பயணிகளின் இன்னல்களை கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது." என குறிப்பிட்டுள்ள தயாநிதி மாறன், அவர் மேற்கொண்ட ஏர் இந்தியா விமான பயணத்தில் ஏற்பட்ட தாமதம் குறித்தும் அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல பயணிகள் அவதிக்குள்ளானதையும் சுட்டிக்காட்டி, தனது எக்ஸ் பக்கத்திலும் கடுமையான குற்றச் சாட்டை பதிவு செய்துள்ளார்.

அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:–

இன்று காலை 6:50 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்ட AI2832 ஏர் இந்தியா விமானம், காலை 9:20 மணிக்கு டெல்லியில் தரையிறங்கியது. ஆனால், விமான நிலைய பார்க்கிங்கில் இடம் இல்லாததால், ஒரு மணி நேரம் டாக்ஸிவேயில் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பிறகு ஊழியர்கள் யாரும் வராததால் மேலும் இரண்டு மணி நேரம் விமானத்திற்குள் பயணிகள் சிக்கித் தவித்தனர். இந்த விமானத்தில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல பயணிகள் இருந்தனர்.

**தனியார்மயமாக்கப்பட்ட பிறகான “புதிய, மேம்படுத்தப்பட்ட” ஏர் இந்தியா இதுதானா?**


விமானத் துறையில் நிலவும் தொடர்ச்சியான குழப்பங்கள். பொறுப்பின்மையை பார்க்கும்போது ஒன்றிய அரசுக்கு இதை சீர்செய்யும் எண்ணம் இல்லை என்றே தோன்றுகிறது. இது திறமையின்மை மட்டுமா அல்லது ஒரு புதிய நிறுவனத்திற்கு வழியமைக்க விமானத் துறையை சீரழிக்கும் முயற்சியா? என கேள்வி எழுப்பியுள்ள தயாநிதி மாறன் எம்.பி அவர்கள், தனது புகாரை சம்பந்தப்பட்ட துறைக்கும் அதிகாரிகளுக்கும் டேக் செய்துள்ளார்.

இந்த சம்பவம், இந்திய விமானத் துறையின் தொடர்ச்சியான பிரச்சனைகளை வெளிச்சம்போட்டு காட்டுகிறது. பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை தயாநிதி மாறன் நாடாளுமன்றத்திலும், சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சகத்துக்கும் கடிதங்கள் வாயிலாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஓ.செ. விசுவநாதன்

### டிசம்பர் 17 (2011)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**சென்னைக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது, 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தீச்சட்டி ஊர்வலம் நடத்தினார்.**

**1968ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் பணிபுரிந்தபோது, தனது பகுதியில் தொ.மு.ச. கிளையினைத் துவக்கி, பின்னர் பெரியார் மாவட்ட த.நா.மின்வாரிய தொ.மு.ச. செயலாளராகப் பணியாற்றினார்.**

**அதன்பின்னர், பெருந்துறை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஈரோடு மாவட்ட துணைச் செயலாளராக தொடர்ந்து இருமுறையும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கங்கைகொண்டான் ஆ.கருப்பையா

### டிசம்பர் 17 (2013)



**பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967–ல் நடைபெற்ற விருகம்பாக்கம் கழக மாநாட்டில் ‘கங்கைகொண்டான்’ தொகுதியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றதோடு, அடுத்து நடைபெற்ற 1971 சட்டமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.**

**1953– ஆம் ஆண்டில் கங்கைகொண்டானில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அதன் செயலாளராகப் பொறுப்பேற்றவர்.**

**கூட்டுறவு சங்கத் தலைவர், பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் பொறுப்பேற்று விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கங்கைகொண்டான் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது, சாதிசமய வேறுபாடற்று பஞ்சாயத்தில் தொண்டாற்றியதற்காக குடியரசுத் தலைவரிடம் விருது பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**